# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்
## O.P. No. 36-2023
**நாள்:** 10.07.2025

**பெயர் : முகமது நாஜிம்**

**PW: 1**

**<u>5ஆம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பந்தமாக என்னிடம் வருவாய் துறையினரோ, காவல் துறையினரோ இது நாள் வரை எவ்வித விசாரணையும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு சொந்தமான கட்டடத்தில் 5ஆம் எதிர்மனுதாரர் அலுவலம் செயல்பட்டு வந்த PFI அலுவலகத்தை சீல் வைப்பதற்கு முன்பு அது குறித்து எவ்வித அறிவிப்பையும் எனக்கு வருவாய் துறையினர், காவல் துறையினர் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி PFI அலுவகலத்தில் தேச நலனுக்கு எதிராக எவ்வித செயல்பாடுகளும் நடைபெற்றதாக நான் எப்போதும் கேள்விபடவும் இல்லை, நேரடியாக தெரிந்து கொள்ளவும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி சீல் வைக்கப்பட்ட அலுவலகத்திற்குள் இருக்ககூடிய 5ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான பொருட்களை நீதிமன்றத்தின் உத்தரிவின் வாயிலாக அவர் பெறுவதற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.